எனது இல. ரீரீஐபீ/01/2007(1)
வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக்
கொள்கைத் திணைக்களம்,
நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01.

2007.04.23

அமைச்சுகளின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
மற்றும் திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

# சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதிசெய்தல் பொது அறிவுரைகள்

2007.03.30 ஆந் திகதி வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01 இன் கீழ் தீர்வைச் சலுகை அடிப்படையிலான வாகன உத்தரவுச் சீட்டுகள் பற்றிய பின்வரும் அறிவுரைகளின் பக்கம் தங்களது தயவான கவனத்தைச் செலுத்துமாறு வேண்டுகிறேன்.

## 01. அமைச்சுகளின் செயலாளர்களுக்கான அறிவுரைகள்

i. இச்சலுகை அடிப்படையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் யாவர் என்பதை சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ii. தகைமைபெறும் உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களைப் பணிப்பாளர் நாயகம், வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், திறைசேரிடம் சிபாரிசு செய்யும்போது அமைச்சுகளின் செயலாளர்களினால் தனிப்பட்ட முறையில் அந்த விண்ணப்பப் பத்திரங்களில் கைச்சாத்திடப்பட்டு அதில் தமது பதவி முத்திரையையும் பதித்தல் வேண்டும்.

iii. ஒரு உத்தியோகத்தருக்கு எக்காரணம் கொண்டும் ஒரு முறைக்குமேல் விண்ணப்பப் படிவங்களைச் சிபாரிசு செய்யாதிருப்பதற்கு (குறைபாடுகளுடன் திருப்பியனுப்பப்பட்ட ஒன்றை அக்குறைபாடுகளைப் பூர்த்திசெய்து அனுப்ப முடியும்) நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iv. அமைச்சினால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைப் பதிவுத் தபாலில் மாத்திரம் பணிப்பாளர் நாயகம், வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், 3 ஆம் மாடி, பொதுத் திறைசேரி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும (எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பப்படிவத்தை நேரில் கொண்டு சென்று கொடுப்பதற்கு விண்ணப்பதாரரிடம் கையளிப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும்) அவ்வாறு விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையை மூடி அதன் இடதுபக்க

மேல் மூலையிலே **"சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதிசெய்தல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

v. இத்திட்டத்தின் கீழ் சிபாரிசு செய்யப்படும் அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் விண்ணப்பதாரருக்கு (ஆட்பதிவுத் திணைக்களத்தினால்) வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையின் இலக்கம் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதனை உறுதிசெய்து கொள்ளவும்.

vi. இத்திட்டத்தின் கீழ்த் தகைமைபெறும் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோப்பைப் பரிசீலித்துத் தேவையான தகைமைகளைப் பெற்றுள்ளாரா என்பதனை உறுதிசெய்துகொண்டதன் பின்னர் உரிய சிபாரிசினை வழங்குமாறு சிபாரிசு செய்யும் உத்தியோகத்தருக்கு வலியுறுத்துதல் வேண்டும்.

vii. சகல அமைச்சுகளின் செயலாளர்களும் தாம் சிபாரிசு செய்து வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்பும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாகப் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

viii. அமைச்சுகளின் செயலாளர்களினால் விண்ணப்பப்படிவங்கள் சிபாரிசு செய்யப்படும் போது அவ்விண்ணப்பப்படிவத்தை இலகுவாகவும் சரியாகவும் இனங் காண்பதற்காக வேண்டி விண்ணப்பப்படிவத்திற்குத் தொடர் இலக்கமொன்றை வழங்குதல் வேண்டும்.

ix. சுற்றறிக்கையில் 3(x) இன் கீழ் செய்யப்படும் கைமாற்றம் தொடர்பாகத் தெரியவந்த உடனேயே சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கும் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கும் தெரிவித்தல் வேண்டும்.

## கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய சந்தர்ப்பங்கள்

i. இச்சலுகைக்கான தகைமைபெறும் உத்தியோகத்தர் ஒருவர் வகிக்கும் பதவிகளின் எண்ணிக்கைகளைக் கவனத்திற்கொள்ளாது ஒரு வாகனத்தை மட்டும் இறக்குமதி செய்வதற்கு உரித்துடையவராவதால் அது தொடர்பில் அவதானமாக இருக்கவும்.

ii. சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் தகைமைபெறும் பதவியொன்றுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்தச் சுற்றறிக்கையின் கீழ் சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்குத் தகுதிபெறாமையால் அது தொடர்பாக அவதானமாக இருக்கவும்.

iii. இத்தீர்வைச் சலுகை அடிப்படையின்மீது வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்குத் தகைமைபெறும் பதவியொன்று அல்லது சம்பள அளவுத் திட்ட மொன்றுக்காக தனிப்பட்டவாறு அல்லது விசேட சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள அல்லது சம்பளமொன்று வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் களும் இந்த உரிமையைப் பெறத் தகுதியற்றவர்கள் என்பதனால் அது தொடர்பாக அவதானமாக இருக்கவும்.

## 02. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கான அறிவுரைகள்

i. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களுக்குரிய பதிவுச் சான்றிதழில் ஐந்தாண்டுகள் பூர்த்தியாகும்வரை உரிமை மாற்றமுடியாதவாறு குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே விசேடமாக இனங்காணக்கூடிய முத்திரையொன்று இலக்கப் பலகையில் இடுதல் வேண்டும்.

ii. இத்திட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் பற்றி மாதாந்த சுருக்கக் குறிப்பொன்றைப் சுங்கப் பணிப்பாளர் நாயகம், சம்மந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு மாதாந்தம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iii. இறக்குமதி செய்த வாகனத்தை 05 ஆண்டுகள் பூர்த்தியாவதற்கு முன்னர் அந்த வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்காகத் திறைசேரியின் செயலாளரினது அனுமதி பெறப்பட்டிருக்குமாயின் அதன் பின்னர் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தொகையைச் சுங்கத் திணைக்களத்திற்குச் செலுத்தியதன் பின்னர் வாகனப் பதிவுச்சான்றிதழில் பதிந்த குறிப்பை அகற்ற முடியும். அது பற்றிச் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கும் வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவித்தல் வேண்டும்.

iv. இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்யும் வாகனங்களுக்கான 05 வருட காலம் பூர்த்தியானதன் பின்னர் இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப் பாடுகளின்றி இறக்குமதியாளருக்கு வாகனம் பற்றிய உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

## 03. சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கான அறிவுரைகள்

i. பணிப்பாளர் நாயகம், வியாபார, தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் ஆகியோருக்கு இச்சலுகையின் கீழ் இறக்குமதி செய்த வாகனங்கள் பற்றிய மாதாந்த அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. இச்சுற்றறிக்கையின் நிபந்தனைகள் மற்றும் நியதிகளை மீறி இறக்குமதி செய்த வாகனங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அது தொடர்பாக மாதாந்தம் திறைசேரிக்கு அறிவித்தல் வேண்டும்.

iii. இத்திட்டத்தின் கீழ் இறக்குமதிசெய்த வாகனங்களை 05 ஆண்டு காலம் பூர்த்தி யாவதற்கு முன்னர் இறக்குமதியாளரினால் திறைசேரியின் செயலாளரின் அனுமதியுடன் தமது உரிமையினைக் கைவிடும் சந்தர்ப்பத்தில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இறக்குமதியாளரிடமிருந்து அறவிட வேண்டிய கைவிடப்பட்ட தீர்வையின் அளவைக் கணிப்பிட்டு, அத்தொகையை மீண்டும் அறவிட்டுக் கொள்ளல். அவ்வாறு வரித்தொகை அறவிடப்பட்டதென்பதனை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளருக்கும் மற்றும் திறைசேரிக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iv. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளின் கீழ் வாகனமொன்று இறக்குமதிசெய்யப்படுவதாக உறுதிப்படுத்தல்.

## 04. உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கான அறிவுரைகள்

i. வாகனமொன்றை இறக்குமதிசெய்வதற்கு எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்களினால் தமது வருமான மட்டம் பற்றி வழங்கும் தகவல்களின் மீது உரிய உத்தியோகத்தர்களின் வருமான மட்டம் பற்றிய சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

ஒப்பம்/ பீ. பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர்

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
5. தாபன பணிப்பாளர் நாயகம்
6. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்
7. சுங்கப் பணிப்பாளர் நாயகம்
8. பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம்
9. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
10. செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு
11. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்